21st January 1965]

அல்லது அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டிருப்பது, கூட்டு றவுத்துறையில் 3, தனியார் துறையில் 4. எல்லா ஆலைகளையும் கூட்டுறவுத் துறையில் வைக்கவேண்டும் என்றால் அதற்குப் போதிய நிதி வசதி கிடையாது. ஆகவே நமக்குத் தொழில் வளரவேண்டும், பண்டங்கள் அதிகம் உற்பத்தியாக வேண்டும் என்பதால் எந்த எந்தத் துறையில் கோரிக்கை வந்தாலும், அவற்றைக் கொடுக்க சர்க்கார் ஆலோசிக்கும்.

திரு. கே. பொன்னையன்: தலைவர் அவர்களே, சர்க்கரைக் கட் டுப்பாட்டை எடுத்துவிடப் போவதாக பேச்சு அடிபடுகிறதே, அப்படி நீக்கப் போவதாக உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது எனக்குத் தெரியாது. மத்திய சர்க்காரைக் கேட்கவேண்டும்.

*43 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் (திரு. ம. கமலநாதன் சார்பில்): கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி வட்டத்தில் சிறிய அளவில் சர்க்கரை உற்பத் தித் தொழிற்சாலை ஆரம்பிக்க யாருக்கேனும் லைசென்ஸ் வழங்கப் பட்டுள்ளதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இல்லை.

எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை

*44 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் (திரு. ம. கமலநாதன் சார்பில்): கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவு வது எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய அரசாங்கம் சென்னைக்கருகிலுள்ள மணலி என்னுமிடத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையை நிறுவ உத்தேசித்துள்ளது. பூர் வாங்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

திரு. கே. ஏ. மதியழகன்: பூர்வாங்க வேலைகளில் நில ஆர்ஜிதம் போன்றவைகள் எவ்வளவு தூரம் முடிந்திருக்கின்றன? அது பற்றிய விவரங்கள் கூற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிலம் வாங்கியாய்விட்டது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மணலியில் ஒரு எண்ணெய் சுத்தி கரிப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாக அமைச்சர் அவர் கள் கூறினார்கள். மணலியில் நிலம் வாங்கியாய்விட்டதென்றால், அந்த நிலத்தின் மதிப்பு எவ்வளவு போடப்பட்டது?